Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 149 | செவ்வாய்க்கிழமை Tuesday | 31.03.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## தொடர்ந்து நான்காவது முறையாக

# கொளத்தூர் தொகுதியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேட்புமனு தாக்கல் செய்தார்

## அமோக ஓட்டு வித்தியாசத்தில் மக்கள் வெற்றி பெற வைப்பார்கள்

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பேட்டி



சென்னை:கொளத்தூர் தொகுதியில் தொடர்ந்து நான்காவது முறையாக போட்டியிடும் தமிழக முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின், தமது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

சென்னை, செம்பியம், பேப்பர் மில் சாலையில் உள்ள ஒருங்கிணைந்த மாநகராட்சி அலுவலக கட்டட வளாகத்தில் தேர்தல் நடத்தும் அதிகாரி சாந்தியிடம் அவர் தனது வேட்பு மனுவை அளித்தார்.

வேட்புமனு தாக்கல் செய்த பின் மு.க ஸ்டாலின் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர்,"திமுகவின் வேட்பாளராக, மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளராக போட்டியிடுகிறேன். கொளத்தூர் தொகுதி மக்கள் நான்காவது முறையும் என்னை அமோகமான வாக்குகள் வித்தியாசத்தில் நிச்சயமாக வெற்றி பெற வைப்பார்கள் என்ற முழு நம்பிக்கையுடன் இருக்கிறேன்.

எங்களின் தேர்தல் பிரச்சாரம் எப்போதும் போல வலுவாக இருக்கும். கடந்த மூன்று முறை நின்று போட்டியிட்டதை விட 4-வது முறை கொளத்தூர் தொகுதி மக்களிடம் அதிக ஆதரவை பார்க்க முடிகிறது. டெல்லியை எதிர்த்து தமிழ்நாடு போராடுகிறது. தமிழ்நாட்டின் உரிமையை காப்பதற்கான இந்தவெற்றி மிகப்பெரிய வெற்றியாக அமையும்" என்று ஸ்டாலின் கூறினார். திமுக தலைவர் மு.க ஸ்டாலினுக்கு முதலமைச்சர் என்ற அந்தஸ்தை கொடுத்த தொகுதி கொளத்தூர். 2011, 2016, 2021 ஆகிய சட்டமன்றத் தேர்தல்களில் மு.க.ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதற்கு முன்பு ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிட்டு அவர் வெற்றி பெற்றார்.

அதாவது 1984 முதல் 2006 -ம் ஆண்டு வரை 6 சட்டமன்றத் தேர்தல்களில் ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிட்டு 4 முறை மு.க.ஸ்டாலின் வெற்றி பெற்றுள்ளார். 2011 ஆம் ஆண்டு முதல் கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்டு தொடர்ந்து 3 முறை ஹாட்ரிக் வெற்றியும் கண்டுள்ளார். இந்த நிலையில், தொடர்ந்து நான்காவது முறையாக, 2026 சட்டப் பேரவை தேர்தலிலும் மு.க.ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியிலேயே களமிறங்குகிறார்.

அவரை எதிர்த்து அதிமுக சார்பில் சந்தான கிருஷ்ணன், நாம் தமிழர் கட்சி சார்பில் சுந்தர பாண்டியன், தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் வி.எஸ் பாபு ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

கொளத்தூர் தொகுதியில் கடந்த 2011 தேர்தலில் அதிமுக வேட்பாளர் சைதை துரைசாமியை 68,677 வாக்குகள் வித்தியாசத்தில் ஸ்டாலின் வீழ்த்தினார். 2016 பொதுத் தேர்தலில், அதிமுக வேட்பாளர் ஜெ.சி.டி. பிரபாகரனை 91,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டார்.

இதேபோன்று, 2021 சட்டமன்றத் தேர்தலில், அதிமுக வேட்பாளர் ஆதிராஜாராமை 70 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் ஸ்டாலின் வென்றார்.

கடந்த 1984 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை, ஒன்பது சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டுள்ள மு.க.ஸ்டாலின் 7 முறை வெற்றி கண்டுள்ளார்.

2026 தமிழக சட்ட மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் இன்று தொடங்கி ஏப்ரல் 6-ம் தேதி முடிவடைகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## பாமக வேட்பாளர் பட்டியல் வெளியீடு:

# தருமபுரியில் சௌமியா அன்புமணி, பெரம்பூரில் திலகபாமா போட்டி



சென்னை: தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிடும் பாமக வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில், பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் விஜய்க்கு எதிராக பாமக சார்பில் திலகபாமா களமிறக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு வரும் ஏப்ரல் 23 அன்று வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இந்த தேர்தலில் அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அன்புமணி ராமதாஸ் தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சி (பாமக) களம் காண்கிறது.

அந்த வகையில், பாமகவுக்கு 18 தொகுதிகள் கூட்டணியில் ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 3 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மீதமுள்ள 15 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் விவரங்களை பாமக தலைமை வெளியிட்டுள்ளது. அவர்களின் விவரங்கள் வருமாறு...

பெரம்பூர் - கவிஞர் ம. திலகபாமா, பி.காம் (மாநிலப் பொருளாளர், பா.ம.க.)

தருமபுரி - முனைவர். சௌமியா அன்புமணி, எம்.ஏ, பி.எச்டி., (தலைவர், பசுமைத் தாயகம்)

விருத்தாசலம் - மருத்துவர் தமிழரசி ஆதிமூலம், எம்.பி.பி.எஸ்., (மாநில செயலாளர், பாட்டாளி மகளிர் சங்கம்)

சேலம் மேற்கு - மு. கார்த்தி பி.ஏ, (முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்; மண்டல ஒருங்கிணைப்பாளர், பா.ம.க)

பென்னாகரம் - பாடி வெ. செல்வம், (மாநிலத் துணைத் தலைவர், பா.ம.க.) போளூர் - சி. ஆர். பாஸ்கரன், எம்.ஏ., (மாநில கொள்கை விளக்க அணிச் செயலாளர், பா.ம.க.)

திருப்போரூர் - வழக்கறிஞர் கே.பாலு, பி.காம்., பி.எல் (செய்தித் தொடர்பாளர், பா.ம.க)

ஜெயங்கொண்டம் - க. வைத்தி, பி.எஸ்சி, (மாநில இணைப் பொதுச் செயலாளர், பா.ம.க.)

சேலம் வடக்கு - எஸ். சதாசிவம், எம்.ஏ, (சட்டப்பேரவை உறுப்பினர்; மாவட்டச் செயலாளர், பா.ம.க.)

விக்கிரவாண்டி - சி. சிவக்குமார், எம்.ஏ (சட்டப்பேரவை உறுப்பினர்; மாவட்டச் செயலாளர், பா.ம.க.)

சோளிங்கர் - வழக்கறிஞர். க. சரவணன், பி. காம்., பி.எல், (மாவட்டச் செயலாளர், பா.ம.க.)

மயிலாடுதுறை - சித்தமல்லி ஏ.பழனிச்சாமி, எம்.காம், (மாவட்டச் செயலாளர், பா.ம.க.)

உத்திரமேரூர் - பெ. மகேஷ்குமார், பி.காம். (மாவட்டச் செயலாளர், பா.ம.க.)

ரிஷிவந்தியம் - அ.ப. செழியன் (மாவட்டச் செயலாளர், பா.ம.க.)

காட்டுமன்னார்கோவில் (தனி) - மருத்துவர் அன்பு.சோழன், பி.டி.எஸ் (மாநில மருத்துவர் அணிச் செயலாளர், பா.ம.க.)

பெரம்பூர் தொகுதியை பொறுத்தவரை, தவெக தலைவர் விஜய், திமுக வேட்பாளர் ஆர்.டி.சேகர், பாமக வேட்பாளர் திலகபாமா ஆகியோருக்கு இடையே மும்முனை போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதே போல, விருத்தாச்சலம் பாமக வேட்பாளர் தமிழரசி ஆதிமூலம், திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் உடன் தேர்தல் களத்தில் நேரடியாக மோதுகிறார்.

### சிட்டிங் எம்எல்ஏக்களுக்கு மீண்டும் வாய்ப்பு

மேட்டூர் தொகுதி எம்எல்ஏவான சதாசிவம், தற்போது சேலம் வடக்கு தொகுதியில் போட்டியிடுகிறார். அங்கு எம்எல்ஏ ராஜேந்திரன் மீண்டும் திமுக சார்பில் களமிறங்குகிறார். அதே போல், மயிலம் தொகுதி எம்எல்ஏவாக உள்ள சிவகுமார், விக்கிரவாண்டி தொகுதியில் போட்டியிடுகிறார். சேலம் மேற்கு தொகுதியில் ராமதாஸ் தரப்பில் களமிறங்கும் பாமக எம்எல்ஏ அருள், அங்கு மீண்டும் போட்டியிடும் நிலையில் பொதுமக்களை சந்தித்து தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். இந்த தொகுதியில் முன்னாள் எம்எல்ஏவும், தற்போதைய பாமகவின் மண்டல ஒருங்கிணைப்பாளருமான மு. கார்த்திக்கு அன்புமணி வாய்ப்பு வழங்கியுள்ளார்.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# ரேஷன் கடைகள், பெட்ரோல் பங்குகள் மூலம் மண்ணெண்ணெய் விநியோகம்: மத்திய அரசு அனுமதி



புதுடெல்லி: எல்பிஜி தட்டுப்பாட்டை சமாளிக்கும் நடவடிக்கையாக, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 21 மாநிலங்களில் வீட்டுப் பயன்பாட்டிற்காக மண்ணெண்ணெய்யை மத்திய அரசு தற்காலிகமாக ஒதுக்கியுள்ளது. மேலும், பெட்ரோல் விற்பனை நிலையங்கள் மூலமும் மண்ணெண்ணெய் விற்பனை செய்யவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 29 அன்று வெளியிடப்பட்ட ஓர் அறிவிப்பின்படி, மத்திய அரசு பெட்ரோலியப் பாதுகாப்பு மற்றும் உரிம விதிமுறைகளைத் தளர்த்தியுள்ளது. இதன் மூலம், மண்ணெண்ணெய் பயன்பாடு இல்லாத பகுதிகளாக அறிவிக்கப்பட்ட டெல்லி, ஹரியானா, உத்தரப் பிரதேசம் மற்றும் குஜராத் உள்ளிட்ட 21 மாநிலங்களில் பொது விநியோகத் திட்டம் மூலமாக மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட விதிமுறைகளின்படி, அரசால் நியமிக்கப்படும் பெட்ரோல் நிலையங்கள் மூலம் மண்ணெண்ணெய் விநியோகிக்க அனுமதிக்கப்படும். இதன்படி ஒவ்வொரு பெட்ரோல் விற்பனை நிலையமும் 5,000 லிட்டர் வரை மண்ணெண்ணெயை இருப்பு வைக்கலாம். இதற்காக, மாநில அரசுகள் மூலம் ஒரு மாவட்டத்திற்கு அதிகபட்சம் இரண்டு பெட்ரோல் பங்குகள் நியமிக்கப்படும். தொடர்ந்து நிலவி வரும் உலகளாவிய நெருக்கடியால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவாகியுள்ள நிலையில், வீடுகளுக்கு அத்தியாவசிய எரிபொருள் கிடைப்பதை உறுதிசெய்யும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். உள்ள எரிபொருள் விநியோக வலையமைப்பின் மூலம் விரைவான விநியோகத்தை எளிதாக்கும் வகையில், தற்போதுள்ள பெட்ரோல் விற்பனை நிலையங்களில் மண்ணெண்ணெயை இருப்பு வைக்கவும் அனுமதிக்கப்பட்டு உள்ளன. இந்த அறிவிப்புகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளன. இது 60 நாட்களுக்கு அல்லது மறு அறிவிப்பு வரும் வரை செல்லுபடியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்



Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## 2026 சட்டமன்றத்தேர்தல் : மானாமதுரை தொகுதியில் மீண்டும் போட்டியிடும் தமிழரசி ரவிக்குமார்



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதி (தனி) 2026 சட்டமன்ற தேர்தலுக்கான திமுக வேட்பாளராக உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட மீண்டும் தமிழரசி ரவிக்குமார் அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு திமுக தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் ஒப்புதலுடன் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியானது. அறிவிப்பு வெளியானதை தொடர்ந்து தமிழரசி ரவிக்குமார் அவர்களின் ஆதரவாளர்கள் மானாமதுரை தேவர் சிலை, அண்ணா சிலை உள்ளிட்ட பகுதிகளில் இனிப்புகள் வழங்கி, பட்டாசு வெடித்து தங்கள் மகிழ்ச்சியை கொண்டாடினர்.

மானாமதுரை சட்டமன்ற தொகுதி வாக்காளர் பெருமக்களின் பேராதரவோடு, சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் போட்டியிடும் வாய்ப்பை பெற்று தொகுதிக்கு திரும்பிய உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் திமுக வேட்பாளரான தமிழரசி ரவிக்குமார் அவர்களுக்கு மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளான காங்கிரஸ், தேமுதிக, விசிக, மதிமுக, சிபிஐ, சிபிஎம், மநீம, முக்குலத்தோர் புலிப்படை, மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள், பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர், நடைபெற இருக்கின்ற சட்டமன்ற தேர்தலில் தமிழரசி ரவிக்குமார் அவர்கள் அமோக வெற்றி பெற தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். மேலும் கடந்த 2021 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று, மானாமதுரை சட்டமன்ற தொகுதியின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினராக வாக்காளர் பெருமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழரசி ரவிக்குமார் புதிய வரலாறு படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற தேவாலயங்களில் ஒன்றான ஆசாரிப்பள்ளம் அடுத்த மேலப்பெரு விளை பகுதியில் அமைந்துள்ள 332 ஆண்டுகள் பழமையான புனித ஜெபமாலை அன்னை தேவாலயத்தில் இன்று காலை முதலே திரளான பக்தர்கள் கூடியிருந்தனர். அவர்கள் கைகளில் குருத்தோலை ஏந்தி ஆலயத்தை சுற்றிவந்து பக்திப் பாடல்கள் பாடினர். இதனைத் தொடர்ந்து சிறப்பு திருப்பலி நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பக்தர்கள் குடும்ப நலன், சமூக ஒற்றுமை மற்றும் நாட்டின் அமைதிக்காக பிரார்த்தனை செய்தனர்.

## உலகளாவிய போக்குவரத்துத்துறை மின்மயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவு காரணமாக மாறிவரும் சூழலில்

## கோவை குமரகுரு கல்வி நிறுவனங்கள் மற்றும் சொசைட்டி பார்ட்ஸ் ஸ்மார்ட் இ மொபைலிட்டி இணைந்து நடத்தும் கோவையில் ஸ்மார்ட் மொபிலிட்டி சர்வதேச மாநாடு




நாளுக்கு நாள் வளர்ந்து வரும் உலகளாவிய போக்குவரத்து துறை மின்மயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவு காரணமாக அதிவேகமாக மாறிவரும் சூழலில் வருங்கால போக்குவரத்து க்கான புதிய பாதையை உருவாக்கும் வகையில், கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள குமரகுரு கல்வி நிறுவன ங்கள் மற்றும் சொசைட்டி ஃபார் ஸ்மார்ட் இ-மொபைலிட்டி இணைந்து நடத்தும் ஸ்மார்ட் மொபிலிட்டி சம்மிட் 2026 எனும் நிகழ்ச்சி நடைபெற்றது. தொழில் துறையில் ஏற்படும் சவால்களுக்கு தீர்வு காணும் வகையில், இரண்டு நாள் மாநாடாக நடைபெற்றது. இம்மாநாட்டின் வாயிலாக மாணவ மாணவியர்கள் மத்தியில் உரையாற்றிய குமரகுரு கல்வி நிறுவனங்களின் முதன்மை கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சி அதிகாரி டாக்டர் குறிஞ்சி குமார் கூறியதாவது. ஸ்மார்ட் மொபிலிட்டி என்பது வெறும் முன்னேற்றம் மட்டும் இல்லை எனவும், சீரமைப்பு என்று தெரிவித்தார், வாகனங்களை சொந்தமாக வைத்திருப்பதை விட அவற்றை பயன்படுத்துவதற்கான அணுகலையே மக்கள் இனி விரும்புவார்கள் எனவும், எதிர்கால வாகனங்கள் வெறும் இயந்திரங்கள் மட்டுமின்றி, அவை கணினி மற்றும் தகவல் தொலைதொடர்புகளுடன், ஒருங்கிணைந்ததளமாக மாறும் என்று தெரிவித்தார். சாலையில் ஏற்பட்ட கூடிய போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், விபத்துகளை தடுக்கவும், மிக முக்கியம் என்று தெரிவித்தார். தொடர்ந்து. குமரகுரு மின்சார அறிவியல் பள்ளியின் இயக்குனர் டாக்டர் ரமேஷ் பாபு மாநாட்டின் விரிவான திட்டங்களை விளக்கினார். இம்மாநாட்டில், 20 தொழில் துறை வல்லுநர்கள் கூடி குழு விவாதங்கள் நடைபெற்றது. இதில், 180 ஆய்வு கட்டுரைகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 55 சிறந்த கட்டுரைகளின் சமர்ப்பிப்பு இதில் அடங்கியது. இந்தியா இ பைக் சேலஞ்ச் போட்டியில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த 96க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு தாங்களாகவே வடிவமைத்த மின்சார பைக்குகளை ஓட்டி அதற்க்கு செயல் விளக்கமும் அளித்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.



## மதுராந்தகம் தனி தொகுதி

## திமுக வேட்பாளர் சி.அமுலு சிவக்குமார் முதலமைச்சர் ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றார்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தனி சட்டமன்ற தொகுதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆசியுடன் மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் ஆதரவும்

பெற்ற வெற்றி வேட்பாளர் சி.அமுலு பொன்மலர் சிவக்குமார் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் தலைமையில் சென்னை திமுக தலைமை கழகம் அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சந்தித்து பூங்கொத்து வழங்கிவாழ்த்து பெற்றார்.

அப்போது அருகில் திமுக பொருளாளர் டி.ஆர்.பாலு, அமைச்சர் எ.வ.வேலு, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, மற்றும் காஞ்சி தெற்கு மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு மாவட்ட துணை அமைப்பாளர் ஜி.சிவக்குமார் உடனிருந்தனர்.

## தூத்துக்குடி திமுக வேட்பாளராக அமைச்சர் கீதா ஜீவன் அறிவிக்கப்பட்டதை வரவேற்று

## வடக்கு மாவட்ட திமுக சார்பில் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்




தமிழகத்தில் வரும் ஏப்ரல் மாதம் 13-ஆம் தேதி நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, திமுகதலைமையிலான கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியலை அக்கட்சியின் தலைமை அறிவித்துள்ளது. இதில் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில், கீதாஜீவன் மீண்டும் வேட்பாளராக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இதை தொடர்ந்து தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சார்பில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திமுக வேட்பாளர் பட்டியலை அறிவித்ததற்கு வரவேற்பு தெரிவித்தும் கீதாஜீவன் மீண்டும் அதே தொகுதியில் போட்டியிடுவதைத் தொடர்ந்து, தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சார்பில் நகரின் பல்வேறு பகுதிகளில் உற்சாகக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. இதன்படி, தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக அலுவலகம் முன்பு திரண்ட திமுகவினர் பட்டாசுகள் வெடித்தும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் திமுகவினர் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டத்துடன் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

நிகழ்ச்சியில் திமுக பகுதி செயலாளர் ஜெயக்குமார், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அபிராமிநாதன், மாணவரணி அமைப்பாளர் சீனிவாசன், மகளிர் அணி அமைப்பாளர் கவிதா தேவி, வட்டச் செயலாளர்கள் பொன்ராஜ், கதிரேசன், டென்சிங், கங்கா ராஜேஷ், சுரேஷ் மகாராஜன், அறங்காவலர் குழு தலைவர்செந்தில்குமார், தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் பிரபு, அருணா தேவி, தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் அண்ணாதுரை, அஸ்வின், கவுன்சிலர்கள் ஜெயசீலி, வைதேகி, ஜான்சிராணி , நாகேஸ்வரி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஐ.ரவி, முன்னாள் கவுன்சிலர் ஜெயசிங், ஐடி விங் நிர்வாகிகள் சுரேஷ்குமார், சந்தானம், உமாமகேஷ், மகேஸ்வரி, மகளிர் அணி ரேவதி, உள்ளிட்ட திமுகவினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர். முன்னதாக வஉசி மார்க்கெட் கேவிகே சாமி சிலை முன்பு திமுக தகவல் தொழில்நுட்ப அணி அணி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## காலணிகளை வெளியில் கழட்டி விடுமாறு ஏடிஎம்களில் பணிபுரியும் காவலர் வாடிக்கையாளர்களுக்கு வாய்மொழி உத்தரவு




சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் உள்ள சில ஏடிஎம்-களில் பணிபுரிந்து வரும் காவலர்கள் ஏடிஎம்களில் பணப் பரிவர்த்தனை மேற்கொள்ள வரும் வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களிடம் ஏடிஎம் அறைக்கு வெளியில் காலணிகளை கழட்டி விடுமாறு வங்கிகளின் விதிமுறைகளுக்குபுறம்பாக தாங்களாகவே வாய்மொழி உத்தரவுகளை வகுத்து வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டு வாடிக்கையாளர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்கி வருவதாக சிலர் குற்றம் சாட்டினர். குறிப்பாக மானாமதுரை கனரா வங்கி ஏடிஎம் நிலையத்தில் பணி புரியும் காவலர் வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களை காலணிகளை வெளியில் கழட்டி விடுமாறு வற்புறுத்தி வருவது வாடிக்கையாக உள்ளதாக பொதுமக்கள் வேதனை தெரிவித்தனர். இதுகுறித்து வங்கியில் பணிபுரியும் சிலரிடம் இதுபோன்ற விதிமுறைகள் எதுவும் நடைமுறையில் இருக்கின்றதாஎன கேட்டபோது, அப்படியான விதிமுறைகள் எதுவும் காவலர்களுக்கு வங்கிகள் அறிவுறுத்தப்படவில்லை என்று தெரிவித்தனர். ஒருவேளை வங்கிகள் இத்தகைய செயலை வலியுறுத்தியிருந்தால் அறிவிப்பு பலகை வைத்திருக்க மாட்டார்களா. ஏன் காவலர்கள் வாய்மொழி உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும் என்றும் வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் கேள்வி எழுப்பி தங்களின் கடும் கண்டனங்களை தெரிவித்தனர். எனவே காலணிகளை கழட்டிவிடுவதும் ஒரு வகையில் தொற்று அபாயம் மற்றும் சுகாதார சீர்கேடு அதிகரிக்கும் என்பதை நினைவில் கொண்டு, காவலர்கள் தங்கள் சுயநலத்திற்கும், தேவைக்கும், வசதிக்கும் ஏற்ப பணிபுரிவதை தவிர்த்து வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு சேவையாற்றவும், இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் பார்த்துக் கொள்ளுமாறும், தவறும் பட்சத்தில் காவலர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வங்கிகளையும் வலியுறுத்தினர்.

## மதுராந்தகம் தனி சட்டமன்றத்தொகுதியில் அதிமுக வேட்பாளர் K.மரகதம் குமரவேல் போட்டி



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தனி தொகுதியில் அதிமுக வேட்பாளராக மரகதம் குமரவேல் போட்டியிடுகிறார்.

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியம் தையூர் கிராமத்தை சேர்ந்த குமரவேல் எம்.ஏ.பட்டதாரி காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப் பினர், மாவட்ட மகளிரணி செயலர் மாநில மகளிரணி இணைசெயலர், தலைமை கழக செயற்குழு உறுப்பினர் பதவியை கழக நிர்வாகிகளின் ஆதரவு பெரும்பான்மையோடு வகித்து வருகிறார். மேலும்

கடந்த 2021-இல் நடைபெற்ற தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிட்ட அவர் 3,570 வாக்குகள் வித்தியாசத்தில் மதிமுகவைச் சேர்ந்த மல்லை சத்யாவை வீழ்த்தினார் என்பது பெருமைக்குரியது.

மேலும் மதுராந்தகம் தொகுதியில் தொகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோவையில் நடைபெற்ற ஆட்டிசம் விழிப்புணர்வு நிகழ்ச்சி




கோவையில் நடைபெற்ற ஆட்டிசம் விழிப்புணர்வு நிகழ்ச்சி நேவிகேட்டிங் ஆட்டிசம் டூகெதர்

எனும் தலைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், பிரபல சின்னத்திரை நிகழ்ச்சி தொகுப்பாளர் அர்ச்சனா, அமித் பார்கவ் ஆகியோர் பங்கேற்றனர்

ஆட்டிசம் குறித்து சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நேவிகேட்டிங் ஆட்டிசம் டூகெதர் என்ற சிறப்பு நிகழ்ச்சி கோவையில் உள்ள ஐ.எம்.ஏ. அரங்கில் நடைபெற்றது.

தேர்ட் ஐ ஆட்டிசம் மையம் மற்றும் கோ ப்ளூ ஆகியோர் இணைந்து நடத்திய இதில், தேர்ட் ஐ ஆட்டிசம் மையம் நிறுவனர் சரண்யா தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் பத்மஸ்ரீ விருது பெற்ற டாக்டர்ஜி.பக்தவத்சலம் மற்றும் டாக்டர் அனுஷாரவி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பேசுகையில்,, ஆட்டிசம் குறைபாட்டை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிவது மற்றும் உள்ளடக்கிய கல்வி வழங்குவதின் அவசியத்தை வலியுறுத்தினர்.

நிகழ்ச்சியில், சின்னத்திரை பிரபலங்களான அர்ச்சனா சந்தோக் மற்றும் அமித் பார்கவ் கலந்து கொண்டு, சமூகத்தில் கருணை மற்றும் விழிப்புணர்வை வளர்க்க வேண்டிய முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர்.

அர்ச்சனா சந்தோக் தலைமையில் நடைபெற்ற நிபுணர் குழு கலந்துரையாடலில், ஆட்டிசம் பற்றிய விழிப்புணர்வு, ஆரம்ப கட்ட சிகிச்சை மற்றும் ஆதரவு அமைப்புகள் குறித்து விரிவாக பேசப்பட்டது.

மேலும், ஆட்டிச மைய மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் விதமாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன...

இந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சி அமர்வு நடத்தப்பட்டு, ஆட்டிசத்தின் ஆரம்ப அறிகுறிகளை கண்டறியும் முறைகள் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்ற உள்ளடக்கிய சூழலை உருவாக்குவது குறித்து நடைமுறை வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

## பனை தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வலியுறுத்தல்



தமிழ்நாடு பனைபாதுகாப்பு அணி மாநில தலைவரும் கருவந்தா பனை தொழிலாளர் சங்க நிர்வாகியுமான வைரக்கண் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில். தென்காசி மாவட்டத்தில் சுமார் 1லட்சம் ஏழை பனை தொழிலாளிகள் பனை தொழிலை மட்டும் நம்பி வசித்து வருகிறார்கள். மேற்படி பனைத் தொழிலானது ஆண்டிற்கு 6 மாதம் காலம் மட்டுமே உள்ளது. இதனால் மேற்படி தொழிலை நம்பியுள்ள ஏழை பனை தொழிலாளிகளின் குடும்பம் தங்களது அன்றாட தேவைகளை கூட பூர்த்தி செய்ய இயலாத நிலையில் உள்ளது. ஆகவே பனை தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவும். கள்ளு கடை திறக்கவும் வழிவகை செய்யுமாறு இதன் மூலமாக கோரிக்கை வைக்கிறோம்



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளராக கீதாஜீவன் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## அச்சிறுப்பாக்கம் பேரூராட்சியில்
# தமிழக வெற்றி கழகம் சார்பில் துண்டு பிரசுரங்கள் வழங்கி தீவிர வாக்கு சேகரிப்பு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அச்சிறுப்பாக்கம் பேரூராட்சியில் தமிழக வெற்றி கழக மதுராந்தகம் தொகுதி வேட்பாளர் கேத்தரின் எழில் கழகத் தலைவர் விஜய் அறிவித்த நிலையில் அச்சிறுப்பாக்கம் பேரூராட்சியில் அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றியம் மற்றும் அச்சிறுப்பாக்கம் பேரூர் இளைஞர் அணி சார்பில் தரணிதரன், ஜானகிராமன், கராத்தேகரன்,ஏழுமலை ஆகியோரின் தலைமையில்

பஜார் வீதியில் சிறு குறு வியாபாரிகளிடம் துண்டு பிரசுரங்கள் வழங்கி த.வெ.க.நிர்வாகிகள் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

அப்போது பேரூராட்சி நிர்வாகிகள் ஜெகதீஷ், அப்பு, ஷேக்அலி, சையது, உள்ளிட்ட தவெக மத்திய ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## கோவை மண்டலத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில்
# தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக போட்டியிட விருப்பம் உள்ள இளைஞர்களுக்கு வாய்ப்பு
### கவுண்டம்பாளையம் தொகுதி வேட்பாளர் வழக்கறிஞர் புஸ்பாணந்தம் பேட்டி

தமிழகத்தில் வரும் ஏப்ரல் 23 ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. இதற்காக பல்வேறு அரசியல் கட்சியினர்களும் தங்களது விருப்ப மனுக்களை வழங்கி வருகின்றனர்.கட்சி சார்பாக,மற்றும் சுயேச்சையாக போட்டியிடுபவர்கள் தங்களது விருப்ப மனுக்களை வரும் 6ம் தேதி வரை வழங்கலாம் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இந்த நிலையில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக, கோவை மண்டலங்களான, கோவை, திருப்பூர், ஈரோடு, நீலகிரி சேலம், தர்மபுரி உள்ளிட்ட பகுதிகளில் போட்டியிட துடிப்பான இளைஞர்கள், மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது விருப்ப மனுவை வழங்கலாம் என தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணை தலைவரும்,வழக்கறிஞருமான புஸ்பாணந்தம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். மேலும் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில தலைவராக சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்,எழுச்சி புயல் சக்தி வேல் இருந்து வருகின்றார். எங்களது கட்சி துவங்கி 20 ஆண்டுகள் ஆகி விட்டதாகவும்,



தற்போது கூட்டணி குறித்த பேச்சுவார்த்தையும் நடைபெற்று வருகிறது இன்னும் ஒரிரு நாட்களில் கூட்டணி குறித்த அதிகாரப்பூர்வ தகவலை மாநில தலைவர் அறிவிப்பார் என தெரிவித்தார். மேலும் கோவை கவுண்டம்பாளையம் சட்ட மன்ற தொகுதியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக நான் போட்டியிடுகின்றேன் எனவும் மற்ற சட்ட மன்ற தொகுதிகளுக்கு விருப்பமுள்ள, ஆர்வமுள்ள, பொது வாழ்க்கையில் ஈடுபாடு உள்ளவர்கள் என்னை அழைக்கலாம் என தெரிவித்தார். இதற்காக 9994684248 அல்லது 9751389368 என்ற எண்ணில் அழைத்து தெரியப்படுத்தவும் என கேட்டு கொண்டார். இதனை தொடர்ந்து கவுண்டம்பாளையம் தொகுதி வேட்பாளர் வழக்கறிஞர் புஸ்பாணந்தத்திற்க்கு பலரும் சால்வை அணிவித்து, வாழ்த்துக்கள் தெரிவித்தனர் இந்த நிகழ்ச்சியின் பொழுது

வழக்கறிஞர் குமாஸ்தா செல்வராஜ், காங்கிரஸ் கட்சி பால்ராஜ், பாலமுருகன், தினேஷ்,கனேஷ்,சிங்காரவேல், பைனான்ஸியர் பெருமாள், முரளிதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



உலக அமைதிக்காக ஒரு நிமிடம் பிரார்த்தனை தேனியில் பார்வதி சில்க்ஸ் தேனியில் மேலாளர் பிரசாந்த், முன்னிலையில் நடைபெற்றது தினமும் காலை 11:11 மணிக்கு ஒரு நிமிட உலக அமைதிக்கான பிரார்த்தனையில் பங்கேற்போம் உலக அமைதி குழு பொறுப்பாளர்மனிதநேயர்பால்பாண்டிஅவர்கள்மற்றும்நல்லோர்வட்டம்பொறுப்பாளர்கள் சர்ச்சில் துறைஅவர்கள்கலந்து கொண்டார்கள்



# மதுராந்தகம் ( தனி ) சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் மரகதம் குமரவேல் அறிமுக கூட்டம்

செங்கல்பட்டு மாவட்டம் மாமண்டூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மதுராந்தகம் தொகுதியின் அதிமுக சார்பில் போட்டியிடும் மரகதம் குமரவேல் அவர்களின் வேட்பாளரை செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ். ஆறுமுகம் அவர்கள் தலைமையில் வேட்பாளரை அறிமுகம் செய்து வைத்து ஆலோசனை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சி ஏற்பாட்டினை மதுராந்தகம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வையாவூர் வி.ஜி குமரன், கருங்குழி பேரூர் கழக செயலாளர் ஆர்.டி ஜெயராஜ், இவர்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது

மதுராந்தகம்தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிடும் மரகதம் குமரவேல் அவர்களை அறிமுகப்படுத்தி 2026 சட்டமன்ற தேர்தலில் அதிமுக சார்பில் வழங்கப்பட்டுள்ள தேர்தல் அறிக்கைகளை எடுத்துரைத்தும் திமுக ஆட்சியில் நடைபெற்ற கொலை கொள்ளை கஞ்சா உள்ளிட்ட பிரச்சனைகளால் பொதுமக்கள் மிகவும் பாதிப்படைந்த நிலையில் மீண்டும் அதிமுகதலைமையில் ஆட்சி அமைந்த உடன் இதற்கான தீர்வுகள் கிடைக்கும் என அதிமுகவேட்பாளர்நிர்வாகிகளிடம் எடுத்துரைத்து வருகின்ற சட்டமன்ற தேர்தலில் மதுராந்தகம் தொகுதியில் அதிமுக சார்பில் வேட்பாளராக களம் காணும் என்னை பெருவாரியானவாக்குவித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என எடுத்துரைத்தார். இந்த நிகழ்ச்சியில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி சார்பில்
# முன்னாள் அமைச்சர் சி.த.செல்லப்பாண்டியன் தலைமையில் செயல்வீரர்கள் வீராங்கனைகள் ஆலோசனை கூட்டம்

அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடியார் ஆலோசனைப்படி கழக வர்த்தக அணி செயலாளர் முன்னாள் அமைச்சர் சி.த.செல்லப்பாண்டியன் தலைமையில் கழக அமைப்புச் செயலாளர் சின்னத்துரை முன்னிலையில் நடைபெற்றது.

தூத்துக்குடி அதிமுக கூட்டணி கட்சிகள் செயல்வீரர்கள் கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் சி.த செல்லப்பாண்டியன் கலந்து கொண்டு பேசுகையில்: திமுக ஒருதீய சக்தி அந்த தீய சக்தியை அழிக்க நமது தலைவர் எடப்பாடி பழனிச்சாமி முழு முயற்சி எடுத்து வருகிறார் என்றார். மேலும் தூத்துக்குடி நகரின் உள்கட்டமைப்பு மற்றும் சாலை வசதிகள் இன்னைக்கு மிகவும் மோசமாக உள்ளது. தூத்துக்குடி மாவட்டத்திலும் தமிழகத்துக்கும் ஒரு மோசமான ஆட்சி நடந்துகிட்டு இருக்கு. இந்த ரெண்டையும் கொட்டத்தையும் அடக்க 'இரட்டை இலை' சின்னத்துல நீங்க எல்லாரும் ஆதரவு கொடுத்து



எனக்குநல்லவெற்றியை தரணும். உங்களுக்காக நான் எப்போதும் உழைப்பேன் என வேட்பாளர் சி.த.செல்லப் பாண்டியன் உறுதி அளித்தார்.

இந்த கூட்டத்தில்

அனைத்து உலகை எம்ஜிஆர்மன்றதுணைச் செயலாளர் ஆறுமுக நயினார், தலைமை கழக பேச்சாளர் எஸ் டி கருணாநிதி, வர்த்தக அணி துணைச் செயலாளர் ராஜா, தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி தலைவர்கள் பாஜக சசிகலா புஷ்பா, விவேகம் ரமேஷ்,

A M ராஜேஷ், அமமுக ஜானியல், நவஜீவன் பெரியசாமி தமகா SDR விஜய் சீலன், பாமக லட்சுமணன், தமமுக லாரன்ஸ், புரட்சி பாரதம் மாரி செல்வம், அதிமுக சார்பு அணி நிர்வாகிகள் டாக் ராஜா, பெருமாள், வீரபாகு, நடராஜன், பில்லா விக்னேஷ், துரை சிங், விஜயகுமார், மாவட்ட நிர்வாகிகள் இணை செயலாளர் ஷெரினா பாக்யராஜ், துணை செயலாளர் சந்தனம், பகுதி செயலாளர்கள் சேவியர், முருகன், சுடலை மணி,

ஜெய்கணேஷ், நட்டார், முத்து, தனராஜ், சந்தனபட்டு, தகவல் தொழில்நுட்ப பிரிவு மண்டல இணைச் செயலாளர் மந்திர மூர்த்தி M.C,மற்றும் ஜீவா பாண்டியன்,

பொன்ராஜ், ஜோதி மணி, PTR ராஜகோபால்,

மனோஜ், அகஸ்டின்,

சகாயராஜ், ராஜா ராம், அன்ட்ரூ மணி, முனியசாமி, ஜெயம் பெருமாள், சிவசுப்பிரமணியன்,

மகளிர் மாவட்ட அணி இணை துணை நிர்வாகிகள் அந்தோனி கிரேஸி, சண்முகத்தாய்,

மெஜிலா,சாந்தி EXMC,

ஞானபுஷ்பம், ராதாஆனந்த், ஆறுமுகநேரி, சாந்தி, முத்து லெட்சுமி, அன்னபாக்யம், தமிழரசி, ராஜேஸ்வரி, இந்திரா, மற்றும் நகர, பகுதி, வார்டு, வட்ட,தொழிற்சங்க, முன்னாள் இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக உடன்பிறப்புகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## கோவை ஆலாந்துறை அடுத்த மத்துவராயபுரம் பகுதியில் உள்ள
# சி.எஸ்.ஐ. கிறிஸ்துநாதர் ஆலய வளாகத்தில் குருத்தோலை ஞாயிறு பவனி நிகழ்ச்சி நடைபெற்றது



கோவை ஆலாந்துறை அடுத்த மத்துவராயபுரம் பகுதியில் உள்ள, சி.எஸ்.ஐ கிறிஸ்துநாதர் ஆலய வளாகத்தில் குருத்தோலை ஞாயிறு பவனி நிகழ்ச்சி நடைபெற்றது.தேவாலய ஆயர் கிறிஸ்டோபர் ராஜேந்திரன் இந்த நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தார். இந்த நிகழ்ச்சியின் வாயிலாக, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பங்கேற்று, கையில் குருத்தோலைகளை ஏந்தி பிடித்தபடி பாடல்களை பாடியபடி, பவனி வந்தனர். இயேசு கிறிஸ்து எருசலேம் நகருக்குள் வெற்றி ஆர்ப்பரிப்போடு நுழைந்த நிகழ்ச்சியை நினைவு கூறும் வகையில் குறுத்தோலை ஞாயிறு நாளை கிறிஸ்தவர்கள் ஆண்டு தோறும் அனுசரித்து வருவது வழக்கம்.

இந்த ஆண்டு இன்று இந்தநிகழ்ச்சி நடைபெற்றது இதில் தேவாலயத்தின் செயலாளர் டாக்டர் பிரின்ஸ் அருள்ராஜ், பொருளாளர் ஆனந்த் ஆசீர், திருமண்டலக்குழு உறுப்பினர்கள் ஜெபசிங், ஞானபிரகாசம் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டு கிறிஸ்துவ பாடல்களை பாடியும், நகர் பகுதிகளில் ஊர்வலமாக வந்தனர். ஏழை எளிய மக்களால் இயேசு வரவேற்க்கபட்ட தாழ்மையின் அடையாளமாகபார்க்கப்பட்டது. இந்த விழா இயேசுவின் அரசத்தன்மைதாழ்மை மற்றும் மீட்பு பணியை மக்களுக்கு நினைவுட்டியது என்பது குறிப்பிடத்தக்கது.

## தேவேந்திர பேனாக்கள் இயக்கம்
# சட்டசபை தேர்தலில் அதிமுக கூட்டணிக்கு ஆதரவு



தேவேந்திர பேனாக்கள் இயக்கத்தின் தலைவர்,பச்சைத் தேவேந்திரர்,வழக்கறிஞர் T.C.பால சுந்தரம் சென்னை கிரீன்வேஸ் சாலையில் உள்ள வீட்டில் அ.இ.அ.தி.மு.க வின் பொதுச்செயலாளர் எடப்பாடியாரை 27-3-26ல் நேரில் சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது வன்முறையற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்கும்,வளமான நாட்டை வளர்த்தெடுப்பதற்கும் எங்கள் தேவேந்திர பேனாக்கள் இயக்கம் அறிவாயுதம் ஏந்தி மக்கள் பணி செய்து வருகிறது.தமிழகத்தில் சில ஆண்டுகளாக சட்டம்,ஒழுங்கு சீர்குலைந்து எங்கள் தேவேந்திரகுல வேளாளர் சமுதாய மக்கள் நாற்றுக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் இந்த நிலை நீடித்தால் நாங்கள் அச்சத்தில் சுதந்திரமற்றுதான் வாழக்கூடிய சூழ்நிலை உருவாகி விடும்,அதனால் ஆட்சி மாற்றம் தேவை என்று வருகின்ற சட்டமன்ற தேர்தலில் அதிமுக கூட்டணிக்கு ஆதரவு கொடுக்கிறது.

மேலும் எங்கள் இயக்கத்தின் நீண்ட நாள் கோரிக்கையான தேவேந்திர குல வேளாளர்கள் பத்து சதவீதம் சிறப்பு இட ஒதுக்கீடோடு பட்டியல் மாற்றம் வேண்டும் என்ற கோரிக்கைக்கு சட்ட திருத்தம் கொண்டு வர மாநில அரசு தன் முழு அதிகாரத்தை பயன்படுத்தி உதவி செய்ய வேண்டும்.

மேலும் எங்கள் தாத்தா தனித்தமிழ் காவலர் ஐயா மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களை கௌரவிக்கும் வகையில் தஞ்சை தமிழ் பல்கலை கழகத்திற்கு ""தேவநேயப்பாவாணர்தமிழ்பல்கலைக் கழகம்""என்று பெயர் சூட்ட வேண்டும்.மேலும் மாவட்டங்களில் உள்ள மாவட்ட தலைமை நூலகங்களுக்கு தேவநேயப் பாவாணர் நூலகம் என பெயர் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கைகள் கூறப்பட்டும்,சமூகநலன்கருதிபத்துகோரிக்கைகளை தேர்தல் அறிக்கையில் சேர்த்து அதிமுக தேர்தல் அறிக்கையில் வெளியிட வேண்டும் என்றும் கூறப்பட்டு ஆதரவு கடிதத்தை அதிமுக பொதுச்செயலாளர் அண்ணன் எடப்பாடி யாரிடம் தேவேந்திரபேனாக்கள் இயக்கதலைவர்பாலசுந்தரம் வழங்கி தங்கள் இயக்க ஆதரவை தெரிவித்தார்.

மேலும் ஆதரவு கடிதம் வழங்கிய பின் பாலசுந்தரம் கூறியதாவது,தென் மாவட்டங்களில் தேவேந்திரகுல வேளாளர்கள் சுமார் 100 சட்டமன்ற தொகுதிக்கும் மேல் சுமார் ஒன்றரை கோடி பேர் வாழ்கிறார்கள்,நடக்கவிருக்கும் 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலில் தேவேந்திரகுல வேளாளர்கள் வாழும் பகுதிகளில் அனைத்து கிராமங்களுக்கும் சென்று களப்பணி செய்து அதிமுக கூட்டணிக்கு வாக்கு சேகரித்து அதிமுக கூட்டணியை அமோக அளவில் பெரு வாரியான வித்தியாசத்தில் வெற்றி பெற செய்வோம் என்று தலைவர் பாலசுந்தரம் சபதம் எடுத்து கொண்டார்.

இந்த தேர்தல் ஆதரவு தெரிவிக்கும் நிகழ்வில் தேவேந்திர பேனாக்கள் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள அமைச்சர் கீதா ஜீவன், முதல்வர் மு.க. ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றுத் தூத்துக்குடி விமான நிலையம் வந்தபோது மரியாதை நிமித்தமாக பொன்னாடை வழங்கி வரவேற்ற தூத்துக்குடி அண்ணா சங்கு குளி சங்கத் தலைவர். இசக்கிமுத்து, சங்க ஆலோசகர் 'எஸ்.சந்தனராஜ் வரவேற்று வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (29.03.2026) நேற்று ஈரோடு மாவட்டம், தாளவாடி, ஆசனூர் ஊராட்சி, அரேபாளையத்தில் வாக்காளர்களிடையே100சதவீதம்வாக்குப்பதிவு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு வாசகம் அடங்கிய ஸ்டிக்கரை வீடுகளின் முகப்பு பகுதியில் ஒட்டியும் துண்டு பிரசுரங்கள் வழங்கியும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

# தூத்துக்குடி தொகுதியில் திமுக 50,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறும்

## அமைச்சர் கீதா ஜீவன் பேட்டி

தூத்துக்குடி சட்டமன்றத்தொகுதி வேட்பாளராக திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள அமைச்சர் கீதா ஜீவன் தூத்துக்குடியில் உள்ள தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்து பின்னர் வடக்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் வைத்து செய்தியாளர் சந்தித்து அவர் கூறுகையில்: தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியில் திராவிட முன்னேற்றக்கழக(திமுக) வேட்பாளராக மீண்டும் போட்டியிட வாய்ப்பு வழங்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்குநன்றி., கடந்த ஐந்து ஆண்டுகளில் முதலமைச்சரின் பல்வேறு நலத்திட்டங்களை தொகுதிக்கு கொண்டு வந்ததன் அடிப்படையில் மக்களிடம் நம்பிக்கையுடன் செல்ல உள்ளேன். கொரோனா, பெருவெள்ளம் உள்ளிட்ட அனைத்து அவசர சூழ்நிலைகளிலும் மக்களுடன் இருந்து பணியாற்றி, எந்த நிலையிலும் மக்கள் பணியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளேன். ஆகவே மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வலிமையான கூட்டணியாக உள்ளது , முதலமைச்சர் அறிவித்தபடி தமிழகத்தில் 200-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றிபெறுவோம். தூத்துக்குடி, விளாத்திக்குளம், கோவில்பட்டி ஆகிய தொகுதிகளில் மதச்சார்பற்ற கூட்டணி கட்சி சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர்கள் விளாத்திகுளம் ஜி. வி. மார்க்கண்டேயன் , கோவில்பட்டி கருணாநிதி உறுதியாக வெற்றி பெறுவார்கள் என்றும் கூறினார். முதலமைச்சர் அறிவித்துள்ள தேர்தல் வாக்குறுதிகளில் மகளிருக்கு ரூ.8000 கூப்பன், காலை உணவுத் திட்ட விரிவாக்கம், மாணவர்களுக்கு லேப்டாப், மகளிர் உரிமைத்தொகை உயர்வு, விவசாயிகளுக்கு நவீன பம்பு செட், நகரப்பகுதிகளில் வீடுகள், கோயில் சீரமைப்பு உள்ளிட்ட பல திட்டங்களை வீடு தோறும் எடுத்துச் சென்று விளக்க உள்ளோம்."

சொன்னதை செய்வோம், செய்வதைதான் சொல்வோம்" என்ற நம்பிக்கையை மக்களிடம் ஏற்படுத்தியுள்ளதே திமுக தேர்தல் அறிக்கையின் பலம் என்று கூறினார். தூத்துக்குடி தொகுதியில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லாத புதிய தொழிற்சாலைகள், SIP-COT வளாகத்தில் மல்டி லெவல் லாஜிஸ்டிக்ஸ் பார்க், சாலை மற்றும் மேம்பால வசதிகள் உள்ளிட்ட பல திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அதிமுக வேட்பாளர் தொடர்பான கேள்விக்கு பதிலளித்த கீதாஜீவன், "இப்போது போட்டியிடும் அதிமுக வேட்பாளர் களமே தெரியாதவர். கடந்த ஐந்து ஆண்டுகளாக எந்தப் பிரச்சனையிலும் மக்களுடன் இருக்கவில்லை. வெள்ளம், மழை போன்ற அவசர காலங்களில் காணாமல் போயிருந்தவர்கள், தேர்தல் நேரத்தில் மட்டும்வந்துநிற்பவர்கள்" என கடுமையாக விமர்சித்தார். மேலும், "மக்களுடன் தினமும் இருந்தவர் யார், அல்லும் பகலும் உழைத்தவர் யார் என்பதை மக்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள். அதனால் திமுக 50,000-க்கும் மேற்பட்ட வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறும்" என்றார். மழை மற்றும் வெள்ளநிலை தொடர்பாக எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கு , முதலமைச்சர், அமைச்சர்கள் நேரில் வந்து நிலைமையை பார்வையிட்டனர். நாங்களும் பகல் இரவு பாராமல் மக்களுடன் இருந்தோம். செய்யப்பட்ட பணிகள் குறித்து தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன. பாதியில் வேலை நிறுத்தப்பட்டது என்பது உண்மையல்ல மேலும், "திட்டங்களை கொண்டு வந்தது தற்போதைய அரசு. அவை முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. உண்மை நிலைமையை அறியாமல் சிலர் பேசுகின்றனர் என்று கீதாஜீவன் தெரிவித்தார்.



நிகழ்ச்சியில் மாநகர திமுக செயலாளர் ஆனந்த சேகரன், காங்கிரஸ் மாநகர் மாவட்ட தலைவர் சகாயராஜ், மண்டல தலைவர் ராஜன், விசிக மாவட்ட செயலாளர் விமல் வங்காளியார், பொருளாளர் வில்சன், தேமுதிக மாவட்ட செயலாளர் தயாளலிங்கம், மதிமுக மாவட்ட செயலாளர் ஆர்.எஸ்.ரமேஸ், ஒழுங்கு நடவடிக்கை குழு விநாயகா ரமேஷ், மாநகர செயலாளர் முருகபூபதி

திமுக மாநகர துணை செயலாளர் கனகராஜ், பகுதி செயலாளர்கள் ஜெயக்குமார், ராமகிருஷ்ணன், மருத்துவ அணி அருண்குமார், மாவட்ட திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அபிராமிநாதன், மாணவரணி அமைப்பாளர் சீனிவாசன், பொதுக்குழு உறுப்பினர் கஸ்தூரி தங்கம், மாநகர தொழிலாளர் அணி முருக இசக்கி, இலக்கிய அணி ஜீவன் ஜேக்கப், அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், ஐடி விங் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் பிரபு, அந்தோணி கண்ணன், நாகராஜன், தொகுதி ஒருங்கிணைப்பாளர் அண்ணாதுரை, இளைஞரணி துணை அமைப்பாளர் ஐ.ரவி, வட்ட செயலாளர் கருப்பசாமி, மற்றும் ஆல்பர்ட், மணி, திமுகவினர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மாவட்டம் தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

## 18 வயது பூர்த்தியான வாக்காளர்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திடும் வகையில் இராட்சத பலூனை வானில் பறக்கவிட்டு வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு




ஈரோடு மாநகராட்சி, மத்திய பேருந்து நிலையம் வணிக வளாகம் மேல்தளத்தில் நேற்று(30.03.2026) மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026-ஐ முன்னிட்டு, 18 வயது பூர்த்தியான வாக்காளர்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திடும் வகையில் இராட்சத பலூனை வானில் பறக்கவிட்டு வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இந்திய தேர்தல் ஆணையம், வாக்காளர்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும்என்பதற்காகபல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன்படி,ஈரோடுமாவட்ட தேர்தல் அலுவலர் / ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 18 வயது நிரம்பிய அனைவரும் வாக்காளர்களாக பதிவு செய்ய வேண்டும். வாக்காளர்கள் அனைவரும் கட்டாயம் வாக்களிக்கவேண்டும்என்பதை வலியுறுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், கையெழுத்து இயக்கம்,செல்பி பாய்ண்ட் மூலமாகவும் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. 100 சதவீத வாக்களிக்கவேண்டும்என்பதை வலியுறுத்தி மிகப் பிரம்மாண்டமான வரைந்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வுஅளவில்கோலங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, நேற்றைய தினம் (30.03.2026) மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஈரோடு மத்திய பேருந்து நிலையம் வணிக வளாகம் மேல்தளத்தில் "வாருங்கள் 100 சதவீதம் வாக்களிப்போம்", "என் வாக்கு என் உரிமை" என்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்த 10அடி சுற்றளவு மற்றும் 10 அடிஉயரம் கொண்ட ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட இராட்சத பலூனை வானில் 150 அடி உயரத்தில் பறக்க விட்டு வாக்காளர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தினார். இந்நிகழ்வுகளில் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் , திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பிரியா, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்) ராஜ்குமார், மண்டலம்-1) மோகனசுந்தரி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஊனமலை ஊராட்சியில் கிராம பொதுமக்களுக்கு இலவச மருத்துவ முகாம்




செங்கல்பட்டு மாவட்டம் பாத்வே நிறுவனர் டாக்டர் ஏ.டி.எஸ்.என் பிரசாத் பிறந்தநாளை முன்னிட்டு டாக்டர் தத்துராவ் நினைவு அறக்கட்டளை சார்பில் ஊனமலை ஊராட்சியில் இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இப்போது மருத்துவ பரிசோதனை,

பல் சிகிச்சை, மாமோகிராம் பரிசோதனை, எலும்பியல் ஆலோசனை, பேச்சுத் திறன் பயிற்சி, உடற்பயிற்சி சிகிச்சை, தொழிற்சிகிச்சை, மனநல ஆலோசனை, கண் பரிசோதனை கட்டாரக்ட் இசிஜி மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய் பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டது. இம்முகாமில் 300-க்கும் மேற்பட்ட நோயாளிகள் பயனடைந்தனர். இம்முகாமில் பாத்வே இணை நிறுவனர் டாக்டர் சந்திரபிரசாத் தலைமை தாங்கினார். சென்னை மற்றும் புதுச்சேரியில் இருந்து வந்த மூத்த மருத்துவர்கள், பாத்வே மருத்துவ அலுவலர்கள் மற்றும்ஆய்வகதொழில்நுட்ப நிபுணர்க ள் கலந்து கொண்டு சேவையாற்றினர். டாக்டர் டிஎம்சி டிரஸ்ட் தலைவர் தூளி பட்நாயக் கலந்து கொண்டார். முகாமை சிறப்பாக நடத்தியதற்காக, கிராம தலைவர் எஸ்.ராஜாராமன் ஏற்பாட்டுக் குழுவினரையும் பாராட்டி, ஊனமலை கிராமத்தில் இரண்டாவது முறையாக மருத்துவ முகாம் நடத்திய டாக்டர் சந்திர பிரசாத்துக்கு ஊராட்சி மன்ற நிர்வாகமும் கிராம பொதுமக்களும் தங்களது நன்றியை தெரிவித்தனர்.







தமிழக சட்டப்பேரவை தேர்தல் வருகிற ஏப்ரல் 23 ஆம் தேதி நடைபெற உள்ளது.ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாநகர் திண்டல் முருகன் கோவிலில் பிரச்சார வாகனத்திற்கு நேற்று பூஜை செய்து பிரச்சாரத்தை தொடங்கினார். தொடர்ந்து தனது தொகுதியில் உள்ள பொதுமக்களை அவர் நடந்தே சென்று நேரடியாக சந்தித்து உதயசூரியன் சின்னத்துக்கு வாக்குகளை சேகரித்தார்.இந்த நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ்,திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



2026 தமிழக சட்டமன்றத் தேர்தலில் ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் தொகுதியில் தமிழக வெற்றிக் கழகம் (தவெக) சார்பில் போட்டியிடும் கே.ஏ.செங்கோட்டையன், நேற்று தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார். கட்சி அலுவலகத்திலிருந்து பேருந்து நிலையம் வழியாக ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களுடன் ஊர்வலமாக வந்த அவர், தேர்தல் நடத்தும் அலுவலரிடம் மனுவைச் சமர்ப்பித்தார்.



சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (29.03.2026) அன்று ஈரோடு மாவட்டம், தாளவாடி, ஆசனூர் ஊராட்சி, அரேபாளையம் மலைகிராம் பகுதியில் வசிக்கும் வாக்காளர்களிடையே 100 சதவீதம் வாக்குப்பதிவு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு வாசகம் அடங்கியஸ்டிக்கரைவீடுகளின்முகப்புபகுதியில்ஒட்டியும்துண்டுபிரசுரங்கள்வழங்கியும்விழிப்புணர்வுஏற்படுத்தினார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (28.03.2026) அன்று ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம், பழனியம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற வாக்குச்சாவடியில் பணிபுரியும் அலுவலர்களுக்கான பயிற்சியில் பயிற்சி பெறும் அலுவலர்களுடன் பயிற்சி குறித்து கலந்துரையாடினார்.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தனி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் சி.அமுலு பொன்மலர் சிவக்குமார் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவல் தொல் திருமாவளவன் அவர்களை சென்னை அசோக் நகர் அம்பேத்கர் திடலில் நேரில் சந்தித்து பூங்கொத்து வழங்கி வாழ்த்து பெற்றார். அப்போது அருகில் கட்சியின் பொதுச் செயலாளர் சிந்தனைச் செல்வன். துணை பொதுச் செயலாளர் வன்னியரசு. எஸ் எஸ் பாலாஜி .மற்றும் காஞ்சி தெற்கு மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு மாவட்ட துணை அமைப்பாளர் ஜி.சிவக்குமார் உடனிருந்தனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.